


திருச்சியில் பேராசிரியர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருச்சி தில்லை நகர் சாஸ்திரி சாலையில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையில் பேராசிரியர் திருவுருவப்படத்திற்கு ஏராளமான திமுகவினர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.இந்நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,மாநகர மேயர் அன்பழகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,



புதுக்கோட்டை மாநகராட்சி, மாலையீடு, கற்பக விநாயகா திருமண மண்டபத்தில், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 05.03.2025 அன்று பங்கேற்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார். உடன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை. முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை அவர்கள் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் அவர்கள், துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.புவனேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது!

# தூதரக வழிமுறைகளை பயன்படுத்தி கைதானவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, மார்ச் 9-**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி யும் இந்திய மீனவர்கள் மேலும் கைது செய்யப்படுவதை தடுத்திடுவதற்கு தேவையான அனைத்து தூதரக வழிமுறைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 14 மீனவர்களை 6.3.2025 அன்று அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மேலும் கைது செய்யப்படுவதைத் தடுத்திட உடனடி தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (7.3.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 6.3.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற 14 தமிழக மீனவர்களை அவர்களது மீன்பிடி விசைப்படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ள மற்றுமொரு சம்பவம் குறித்து மிகுந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ள முதலமைச்சர் அவர்கள், 2025ஆம் ஆண்டில், கடந்த இரு மாதங்களில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்படுவது இது ஒன்பதாவது முறை என்றும், இன்றைய நிலவரப்படி 227 மீன்பிடிப் படகுகளும், 107 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் பிடியில் உள்ளதையும் ஆழ்ந்த கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, இலங்கையில் தமிழக மீனவர்கள் நீண்ட காலத்திற்கு சிறை வைக்கப்பட்டிருப்பதோடு, அவர்களை விடுவிக்க அதிகபட்ச அபராதத்தை விதிக்கத் தொடங்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், சிறைவாசம், அபராதம் மற்றும் இலங்கை சிறையில் இருக்கும் காலத்தில் ஏற்படும் வருமான இழப்பு போன்ற துன்பங்களுக்கும் அப்பால், அவர்களின் பொருளாதாரத்திற்கு உதவக்கூடிய ஒரே ஆதாரமாக விளங்கும் அவர்களின் படகுகளையும் இலங்கை அரசு திருப்பித் தராததால், தமிழக மீனவர்கள் தற்போது தங்களது வாழ்வாதாரத்தில் பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொண்டுள்ளனர் எனத் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் மேலும் கைது செய்யப்படுவதை தடுத்திடுவதற்கு தேவையான அனைத்து தூதரக வழிமுறைகளையும் பயன்படுத்திடுமாறும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திருத்தணி வட்டம் பீரகுப்பத்தில் நடந்த

# சாலை விபத்தில் உயிரிழந்த 4 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 8**

**திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பீரகுப்பம் மதுரா கே.ஜி.கண்டிகை கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பீரகுப்பம் மதுரா கே.ஜி.கண்டிகை கிராமத்தில் நேற்று (07.03.2025) பிற்பகல் 03.30 மணியளவில் திருத்தணியில் இருந்து சோளிங்கர் நோக்கிச் சென்ற டிப்பர் லாரியும், ஆர்.கே.பேட்டையில் இருந்து திருத்தணி நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிய விபத்தில் பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை வட்டம், அம்மையார்குப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்கன் (வயது 60), த/பெ. சுப்பிரமணி, சிவானந்தம் (வயது 53), த/பெ.சண்முகம், மகேஷ் (வயது 40), த/பெ.கண்ணியப்பன் மற்றும் முரளி (வயது 38), த/பெ.பெரியசாமி ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து திருத்தணி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் 28 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித் துக் கொள்வதோடு, உயிரி ழந்தவர்களின் குடும்பத் தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 9**

ம.அ.9.ந.க.எண்.இ1/02104/2024 **இரண்டு உறை மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

மண்டல அலுவலர், மண்டலம் - 9 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் - 9, பகுதி - 25 வார்டு - 123 - சி.பி. இராமசாமி சாலையில் அமைந்துள்ள சுகாதார மைய கட்டடத்தை (Early intervention centre) இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மாற்றி அமைக்க சுகாதார மைய கட்டடத்தை மேம்படுத்தும் பணி

பணியின் தோராய மதிப்பு ரூ.79.04 இலட்சங்கள்
முன் வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **20.03.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **21.03.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 934 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மண்டல அலுவலர், மண்டலம் - 9**






தர்மபுரி நகர தி.மு.க சார்பில், நகர செயலாளர் நாட்டான் மாது ஏற்பாட்டில் மாவட்ட பொறுப்பாளர் பி.தருமச்செல்வன் தலைமையில் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. முன்னிலையில் தர்மபுரி நான்கு ரோடு அண்ணா சிலை அருகில் இனமான பேராசிரியர் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் லட்சுமி மாது, வே.தங்கமணி,உமாசங்கர், ஆறுமுகம், டி.எல்.காவேரி, வைகுந்தம், முல்லைவேந்தன்,அழகுவேல், அன்பழகன்,சம்மந்தம்,கனகராஜ், சுருளிராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் செய்துள்ள சாதனைகளுக்கு

# மக்கள் மீண்டும் தி.மு.க.வைதான் ஆட்சியில் அமரவைப்பார்கள்!

## திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

*திருச்சி, மார்ச் 9 -*

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் கருமண்டபம் பகுதி செயலாளர் மோகன்தாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இந்தக்கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர மேயர் அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, கழக கொள்கை பரப்பு துனணச் செயலாளர் கரூர் முரளி, தலைமை கழக பேச்சாளர் தர்மபுரி அதியமான், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு நமது தளபதி அவர்களை முதலமைச்சராக முடியாது என எதிர்க்கட்சிகள் கூறிக் கொண்டிருந்தார்கள் அதையும் மீறி மக்களின் ஆதரவோடு முதலமைச்சராகி நான்காண்டை நிறைவு செய்துள்ளார். இந்த நான்கு ஆண்டிலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டத்தை மக்களுக்கு செயல்படுத்தி உள்ளார் நம்முடைய முதலமைச்சர்.

மக்களுக்கு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி தமிழகத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு சென்று இருக்கக் கூடிய நிலையில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு நிதி நெருக்கடியை உண்டாக்கியுள்ளார்கள். தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை தர மறுக்கிறார்கள். ஒன்றிய அரசு நிதியை தர மறுத்தபொழுதும் மக்களுக்காக எந்த திட்டத்தையும் நிறுத்தாமல் அதனை நம்முடைய முதலமைச்சர் செயல் படுத்தி வருகிறார். தி.மு.க.வை அழித்து விட வேண்டும் என பல்வேறு சிரமங்களை ஒன்றிய அரசு தந்து கொண்டுள்ளது.

தொகுதி மறு வரையறை தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்தார். அதில் நான்கு கட்சிகளைத் தவிர மீதமுள்ள அனைத்து கட்சிகளும் கலந்துகொண்டு தமிழக அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை ஒரு மனதாக ஏற்றுக் கொண்டார்கள். கலைஞர் காலத்தில் கூட அனைத்து கட்சிகளையும் அரவனைத்து இவ்வாறு செய்ததில்லை தற்போதைய முதலமைச்சர் அதை செய்துள்ளார். எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என கூறி அனைவரையும் முதலமைச்சர் அரவனைத்துள்ளார்.

பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய மூவரின் ஒட்டுமொத்த உருவமாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இருந்து வருகிறார்.

அரசை மட்டுமல்ல தி.மு.க.வையும் மிகவும் கட்டுக்கோப்பாக வழி நடத்தி வருகிறார் முதலமைச்சர்.

மிகப்பெரிய கூட்டணி அமைத்து 2026 இல் வெற்றி பெற்று விடுவோம் என அ.தி.மு.க.வினர் கூறுகிறார்கள் ஆனால் தி.மு.க. தான் வெற்றி பெறும்.

தமிழக அரசு செய்த சாதனைகளுக்கு மக்கள் மீண்டும் தி.மு.க.வைதான் ஆட்சியில் அமர வைப்பார்கள்.



ஒவ்வொரு தி.மு.க. தொண்டரும் உழைத்து மீண்டும் மு.க.ஸ்டாலினை முதலமைச்சராகுவார்கள்.

எத்தனை தலைவர்கள் தமிழ்நாட்டில் இருந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் நம்பிக் கொண்டிருக்கும் ஒரே தலைவர் மு.க. ஸ்டாலினை தான்.

ஒருமுறை புழல் ஏரி உடைந்தது அந்த நேரத்தில் எந்த அதிகாரிகளும் வரவில்லை அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞருக்கு அது குறித்து தகவல் வந்தவுடன் உடனடியாக களத்திற்கு சென்றார். அவர் வழியிலேயேதான் தற்போதைய முதல மைச்சரும் நேரம் காலம் பார்க்காமல் தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்து வருகிறார்.

தி.மு.க.வை தோல்வி அடைய செய்வோம் என பலர் பேசுகிறார்கள் யாராக இருந்தாலும் களத்திற்கு வர வேண்டும் எவ்வளவு பெரிய கூட்டணி அமைத்து வந்தாலும் அதனை தி.மு.க. எதிர் கொள்ளும்.

கலைஞருக்கு உறுதுணையாக தளபதி எப்படி இருந்தாரோ அதுபோல தற்போது தளபதிக்கு உறுதுணையாக உதயநிதி அவர்கள் களப்பணியாற்றி வருகிறார்.

எந்தெந்த துறைகளில் வேலை வாய்ப்பு இருக்கிறதோ அதனை நிரப்ப வேண்டும் என முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

டிஎன்பிஎஸ்சி மூலமாக கடந்த 4 ஆண்டு காலத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அரசு பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

திருச்சி மாவட்டத்தில் டைடல் பார்க் வரவுள்ளது அதில் 5000 பேருக்கு வேலை கிடைக்கும்.

திருச்சி மாவட்டத்தில் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது நலத்திட்ட உதவிகள் மட்டும் ஒரு லட்சம் பேருக்கு திருச்சி மாவட்டத்தில் மட்டும் முதலமைச்சரும் துணை முதலமைச்சர் வழங்கி உள்ளார்கள்.

நகர்ப்புற பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு எளிதாக பட்டா கிடைக்க புதிய அரசாணை முதலமைச்சர் வெளியிட உள்ளார்கள் அதன் மூலம் நகர் புறத்தில் வசிக்கும் மக்கள் எளிதாக பட்டாவை பெற்றுக் கொள்ள முடியும்.

இன்று ஒன்றிய அரசை தைரியமாக எதிர்த்து பேசக் கூடிய முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார்.

ஒரு விவகாரத்தை முதலமைச்சர் மு முன்னெடுத்தால் அனைவரும் ஒன்று சேர்வார்கள் என பல்வேறு கட்சியினர் கூறுகிறார்கள். மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்க முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் துடிப்போடு அவர் இருப்பதால் தான் நடந்து முடிந்த அனைத்து தேர்தலிலும் திமுக வெற்றி பெற்றுள்ளது வரும் தேர்தலிலும் வெற்றி பெறும் என பேசினார்.

## தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மற்றும்

# முக்கால்நாயகன்பட்டியில் முதல்வர் பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் கே.வி.கே.சீனிவாசன் தலைமையில் வழங்கல்!

*தருமபுரி,மார்ச்-9-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72 வது பிறந்தநாளை யொட்டி தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் நகர தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மேற்கு காரிமங்கலம் பள்ளியில் குழந்தைகளுக்கு இனிப்பு நோட்டு புத்தகம் உபகரணங்கள் நகர செயலாளர் கே.வீ.கே.சீனிவாசன் தலைமையில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி பரணி முன்னிலையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.சம்பத்,பொது குழு உறுப்பினர்குட்டிமோகன், இளைஞர் அணி சுரேஷ், அருள், சந்தோஷ் ஹரிஹரன்,பொறியாளர் அணி அருண்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை நகர தகவல் தொழில் நுட்ப அணி சம்பத், கோகுல் ,மனோஜ் குமார், கீதாமுத்துசெல்வம், பிரியா சங்கர், சதீஷ்,ஆகியோர் செய்திருந்தனர். தருமபுரி மேற்கு மாவட்டம் கிழக்கு ஒன்றிய BLA 2 முகவர் எஸ் பி சுரேஷ் ஏற்பாட்டில் முக்கல்நாய்க்கன்பட்டி சவுலஅள்ளி பகுதியில் விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளர் சரவணன் தலைமையில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கே பி சக்திவேல் முன்னிலையில் கேக் வெட்டி,25 நபர்களுக்கு வேட்டி வழங்கப்பட்டது.

நிகழ்வில் கிளை செயலாளர் கோவிந்தராஜ்,ஆறுமுகம், சிவலிங்கம், குமார், அருண்குமார், சதீஷ்குமார்,சந்தோஷ்,பன்னீர்செல்வம், ரஜினி, வெற்றி, பிரகாஷ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.




வடகோவை,கிராஸ்கட் சாலையில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக், இனமானப் பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி, தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து,மு.இரா.செல்வராஜ்,அ.தமிழ்மறை மற்றும் பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் தர்மபுரி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பத்திரெட்டிஅள்ளி, சிக்கம்பட்டி,மஞ்சநாயக்கன் தண்டா உள்ளிட்ட 7 கிராமங்களில் 1000 பேருக்கு வேட்டி,சேலை மற்றும் மரக்கன்றுகளுடன் நலதிட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன்,மற்றும் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. ஆகியோர் வழங்கி பிறந்தநாள் உறுதிமொழி ஏற்றனர்.கே.மனோகரன் முன்னிலை வகித்தார்.விழா ஏற்பாடுகளை கே.பி.சக்திவேல், என்.ஏ. வெற்றிவேல்,கோவிந்தராஜ், தங்கமுரளி, உதயகுமார்,சேகர்,செல்வம், கணேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.